ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

பெரியாழ்வார் அருளிச்செய்த பெரியாழ்வார் திருமொழி

# 4.6 – காசும் கறையுடை

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 4.6 – காசும் கறையுடை

‡ காசும் கறை உடைக் கூறைக்கும் ⋆ அங்கோர் கற்றைக்கும்
ஆசையினால் ⋆ அங்கவத்தப் பேர் இடும் ⋆ ஆதர்காள் ! ⋆
கேசவன் பேர் இட்டு ⋆ நீங்கள் தேனித்திருமினோ ⋆
நாயகன் நாரணன் ⋆ தம் அன்னை நரகம் புகாள் ‖ **4.6.1** ‖

அங்கொரு கூறை ⋆ அரைக்குடுப்பதன் ஆசையால் ⋆
மங்கிய மானிட சாதியின் ⋆ பேர் இடும் ஆதர்காள் ! ⋆
செங்கண் நெடுமால் ! ⋆ சிரீதரா ! என்றழைத்தக்கால் ⋆
நங்கைகாள் ! நாரணன் ⋆ தம் அன்னை நரகம் புகாள் ‖ **4.6.2** ‖

உச்சியில் எண்ணெயும் ⋆ சுட்டியும் வளையும் உகந்து ⋆
எச்சம் பொலிந்தீர்காள் ! ⋆ என் செய்வான் பிறர் பேர் இட்டீர் ⋆
பிச்சை புக்காகிலும் ⋆ எம்பிராந் திருநாமமே
நச்சுமின் ⋆ நாரணன் ⋆ தம் அன்னை நரகம் புகாள் ‖ **4.6.3** ‖

மானிட சாதியில் தோன்றிற்றோர் ⋆ மானிட சாதியை ⋆
மானிட சாதியின் பேர் இட்டால் ⋆ மறுமைக்கில்லை ⋆
வான் உடை மாதவா ! ⋆ கோவிந்தா ! என்றழைத்தக்கால் ⋆
நான் உடை நாரணன் ⋆ தம் அன்னை நரகம் புகாள் ‖ **4.6.4** ‖

மலம் உடை ஊத்தையில் தோன்றிற்றோர் ⋆ மல ஊத்தையை ⋆
மலம் உடை ஊத்தையின் பேர் இட்டால் ⋆ மறுமைக்கில்லை ⋆
குலம் உடைக் கோவிந்தா ! ⋆ கோவிந்தா ! என்றழைத்தக்கால் ⋆
நலம் உடை நாரணன் ⋆ தம் அன்னை நரகம் புகாள் ‖ **4.6.5** ‖

நாடும் நகரும் அறிய ⋆ மானிடப் பேர் இட்டு ⋆
கூடி அழுங்கிக் ⋆ குழியில் வீழ்ந்து வழுக்காதே ⋆
சாடிறப் பாய்ந்த தலைவா ! ⋆ தாமோதரா ! என்று
நாடுமின் ⋆ நாரணன் ⋆ தம் அன்னை நரகம் புகாள் ‖ **4.6.6** ‖

மண்ணில் பிறந்து மண் ஆகும் ⋆ மானிடப் பேர் இட்டு ⋆ அங் -
கெண்ணம் ஒன்றெண்ணி இருக்கும் ⋆ ஏழை மனிசர்காள் ! ⋆
கண்ணுக்கினிய ⋆ கருமுகில் வண்ணன் நாமமே
நண்ணுமின் ⋆ நாரணன் ⋆ தம் அன்னை நரகம் புகாள் ‖ **4.6.7** ‖

நம்பி பிம்பி என்று ⋆ நாட்டு மானிடப் பேர் இட்டால் ⋆
நம்பும் பிம்பும் எல்லாம் ⋆ நாலு நாளில் அழுங்கிப் போம் ⋆
செம் பெருந் தாமரைக் கண்ணன் ⋆ பேர் இட்டழைத்தக்கால் ⋆
நம்பிகாள் ! நாரணன் ⋆ தம் அன்னை நரகம் புகாள் ‖ **4.6.8** ‖

ஊத்தைக் குழியில் ⋆ அமுதம் பாய்வது போல் ⋆ உங்கள்
மூத்திரப் பிள்ளையை ⋆ என் முகில் வண்ணன் பேர் இட்டு ⋆
கோத்துக் குழைத்துக் ⋆ குணாலம் ஆடித் திரிமினோ ⋆
நாத் தகு நாரணன் ⋆ தம் அன்னை நரகம் புகாள் ‖ **4.6.9** ‖

‡ சீர் அணி மால் ⋆ திருநாமமே இடத் தேற்றிய ⋆
வீர் அணி தொல் புகழ் ⋆ விட்டுசித்தன் விரித்த ⋆
ஓர் அணி ஒண் தமிழ் ⋆ ஒன்பதோடொன்றும் வல்லவர் ⋆
பேர் அணி வைகுந்தத்து ⋆ என்றும் பேணி இருப்பரே ‖ **4.6.10** ‖

அடிவரவு — காசும் அங்கொரு உச்சியில் மானிடம் மலம் நாடு மண் நம்பி ஊத்தை சீரணி தங்கை

காசும் கறையுடை முற்றிற்று

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்